நகர்மன்றம்
உதகமண்டலம்
22.08.2022

**அன்புடையீர்,**

வணக்கம், இந்நகர்மன்ற ஆகஸ்ட் 2022ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 25.08.2022, வியாழக்கிழமை அன்று காலை 11.30 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்பட கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>**

1. நகராட்சி எல்லைக்குட்பட்ட சம்மர்ஹவுஸ் காலனி பகுதியில் உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு மாற்ற நடைபாதை இல்லாத காரணத்ததால் அந்த நடைபாதை பயன்படுத்தி வருகிறார்கள் தற்பொழுது பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் வாகனங்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் உள்ள நடைபாதை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

2. நகராட்சி எல்லைக்குட்பட்ட குருசடிகாலனி பகுதியில் உள்ள பழைய பைக்காரா ரோடு சாலையில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதால் பொதுமக்கள் செல்வதற்கும் போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000/– க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

3. நகராட்சி எல்லைக்குட்பட்ட வெட்னரி ஆஸ்பிடல் சாலையில் உள்ள அருணா காட்டேஜ் அருகில் உள்ள அருணா காட்டேஜ் நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கும் வாகனங்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. தற்பொழுது பருவமழை பெய்து வருவதால் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,50,000/– அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

4. நகராட்சி எல்லைக்குட்பட்ட குருசடி காலனி சாலையில் ஓரத்தில் உள்ள மழைநீர் செல்வதற்கு போதிய கால்வாய் வசதி இல்லாத காரணத்தால் மழைநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்கிறது. அதனால் அருகில் உள்ள வீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. தற்பொழுது பருவமழை தொடங்க உள்ளதால் மழைகாலங்களில் அதிகமான பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அச்சாலையில் மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,50,000/–க்க அனுமமி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

5. உதகமண்டலம் நகராட்சி அலுவலகத்தில் குடிநீர் பிரிவு மற்றும் கூட்ட அரங்கு (Meeting Hall) கட்டிடம் மழைகாலங்களில் மழைநீர் அறையினுள் வருவதால் நகராட்சி பணியாளர்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள அலுவலக அறையின் மேற்கூரையினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.60/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

6. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14ல் பேண்ட் லைன் பகுதியில் சுமார் 250 குடியிருப்புகள் உள்ளன. மேற்கண்ட குடியிருப்புகளுக்கு மேல் பகுதியில் விவசாய நிலத்திலிருந்து ஊற்று நீர் மற்றும் மழை காலங்களில் மழைநீர் தொடர்ந்து பொதுமக்கள் பயன்படுத்தும் நடைபாதையில் செல்வதால் பொதுமக்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் மழைநீரானது நகரின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள கமர்சியல் சாலையில் செல்வதால் பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் சாலையை கடக்க சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி பேண்ட் லைன் பகுதியில் மழைநீர் செல்ல ஏதுவாக மழைநீர் கால்வாய் மற்றும் சுவர் ஸ்லேப் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்ட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**மன்றம் அனுமதிக்கலாம்.**

7. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14ல் ஸ்டேட் பேங்க் ஷாட்கட் பகுதி சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட சிமெண்ட் சாலையை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு மழையினால் மண் அரிப்பு ஏற்பட்டு நடைபாதையின் இருபுறமும் பழுதடைந்துள்ள சாலை மற்றும் மழைநீர் கால்வாயினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.50/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**
**அனுமதி வழங்கலாம்.**

8. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20ல் பள்ளிவாசல் அருகிலுள்ள எல்லன் காட்டேஜ் தெருவில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அடிக்கடி கழிவுநீர் சாலையில் வழிந்தோடுவிதாலும் மேலும் சாலை மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் மேற்கட்ண கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மற்றும் சாலையினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள், தொட்டிகள் மற்றும் சாலையினை சீரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.20/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

9. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21ல் கருப்பண்ணன் பிள்ளை தெருவில் கழிவுநீர் தொட்டிகள், குழாய்கள், மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை சீரமைத்து தரக் கோரி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் நடைபாதையில் சென்று சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள், தொட்டிக, மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதையினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.60 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

10. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22ல் அரசு கால்நடை மருத்துவமனை சாலைக்கு முன்புறம் உள்ள குடியிருப்பு பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை முழுவதுமாக சேதமடைந்துள்ளதை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள பாதாள சாக்கடை குழாய்கள், தொட்டிகள் மற்றும் தடுப்பு சுவற்றுடன் கூடிய நடைபாதை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8.90/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

11. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7ல் விவேகாநந்தா நகர் பகுதியில் சூர்யகுமார் வீடு முதல் வினோத் வீடு வரை உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே தற்பொழுது பருவமழை பெய்து வருவதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் செல்வதற்கு அப்பகுதியில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

12. நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜல்லிகுழி பகுதியில்ல் ஜாய்ஸ் வீட்டின் பின்புறத்தில் கடந்த நாட்கயில் பெய்த மழையின் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு பொதுமக்கள் செல்ல இயலாமல் பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் மீண்டும் தொடர்ந்து மழைபெய்து வருவதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. அப்பகுதி மக்களுக்கு மாற்று நடைபாதை இல்லாத காரணத்தால் அந்நடைபாதையை சீர்செய்ய அவசியம் ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,50,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

13. நகராட்சி எல்லைக்குட்பட்ட 36வது வார்டு மேல்காந்தி நகர் பகுதியில் உள்ள குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலுவதில்லை. மேற்கண்ட பகுதியானது மிகவும் உயரமான பகுதியில் அமைந்துள்ளதாலும் அருகில் எந்த விதமான குடிநீர் வசதிகளும் இல்லாத காரணத்தால் பழுதடைந்த குழாய்களை சீர் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி குடிநீர் பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

14. நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜல்லிகுழி பகுதியில் கடந்த நாட்களில் பெய்த மழையின் காரணமாக மண் சரிவு ஏற்பட்டு பொதுமக்கள் நடப்பதற்கு பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் அப்பகுதியில் போதிய நடைபாதை இல்லாத காரணத்தால் பொதுமக்கள் அதிகம் சிரமபடுகிறார்கள். எனவே மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவருடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.8,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

15. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24ல் உள்ள மடப்பள்ளி நாயக்கன் தெருவில் உள்ள நடைபாதையில் போதிய கால்வாய் மற்றும் மழைநீர் செய்ய வழிவகை இல்லாத காரணத்தால் மழைநீர் அருகில் உள்ள வீடுகளுக்குள் செல்கிறது மற்றும் அப்பகுதிகளில் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதி வழங்கலாம்.

16. நகராட்சி எல்லைக்குட்பட்ட ரிச்சிங் காலனி பகுதியில் உள்ள குடிநீர் கிணற்று பகுதியில் போதிய சுற்றுசுவர் இல்லாத காரணத்தால் அச்சாலையின் வழியாக அதிகமான கனரக வாகனங்கள் செல்வதாலும் மற்றும் அப்பகுதியில் மண்சரிவு ஏற்படுகிறது மற்றும் கிணற்று பகுதிக்கு செல்ல இயலுவதில்லை, மேலும் மழைகாலங்களில் மின்மோட்டார் இயக்குவதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் மற்றும் சுற்றுசுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

17. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் பகவதி அம்மன் கோவில் முதல் முக்கோணம் வரை உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைநீர் சாலையில் செல்கிறது. அதனால் வாகனங்கள் செல்வதற்கும் பொதுமக்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

18. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள சுல்தான்பேட்டை பகுதியில் பழைய போஸ்ட் ஆபீஸ் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது மற்றும் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதாலும் மற்றும் அருகில் உள்ள வீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

19. இந்நகராட்சி சொந்தமான குளிச்சோலை பகுதியில் அபாயகரமான விழும் நிலையில் உள்ள மரத்தை வெட்டி அகற்றி பணிக்காக 17/08/2022 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடுத் தொகை ரூ. லட்சத்தில் | விலைப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரர் பெயர் மற்றும் முகவரி | அதிக விலைப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 2 குளிச்சோலை சாலையின் ஒரத்தில் தற்போது பெய்த கனமழையில் | ரூ.39/– | 1. திரு.அபிஷேக், சாய்ராம் டிப்போ கிரின் பீல்டு ரோடு ரூ.17500/– | திரு.நிக்கோலஸ், லையோலா டிப்பர் டிப்போ மற்றும் விநியோக உதகை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அபாயகரமான நிலையில் உள்ள ஒரு கற்பூர மற்றும் ஒரு தோசவுக்கு மரங்கள் வெட்டி எடுத்து செல்லும் பணி | | 2. திரு.கே.பாலன், சிவதாஸ் டிப்போ, வால்சம்பர் ரோடு ரூ.21,000/- | ரூ.40,500/- |
| | | | 3. திரு.நிக்கோலஸ், லையோலா டிப்பர் டிப்போ மற்றும் விநியோக உதகை ரூ.40,500/- | |

மேற்கண்ட பணிக்கு அதிக விலைப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்தாரரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் ஏற்கலாம், மேலும் அவசர அவசியம் கருதி நகரமன்ற முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண். இ4/5390/2022)**

20. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1 எச்.பி.எப் வள்ளுவர் நகர் வடக்கு பகுதியில் சுமார் 75 மீ நீளமும் 3 மீ அகலமும் கொண்ட படிக்கட்டும் எச்.பி.எப் பாரதியார் நகர் பாலமுருகன் கோவில் செல்லும் பகுதியில் 60 மீ நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட சிமெண்ட் நடைபாதை ஆனது தற்போது பெய்த மழையினால் பழுதடைந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த நடைபாதையை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்த் தொகை ரூ.9.50/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.**

**21.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28 மஞ்சனக்கொரை முதல் டன்மீர் செல்லும் நடைபாதையில் மழையினால் மண் சரிந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் நடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் பழுதடைந்து உள்ள இடத்தில் தடுப்புச் சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே மேற்கண்ட மழையினால் பழுதடைந்த இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி தடுப்புச்சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.9.95/- இலட்சத்திற்கு நகராட்சிக்கு வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

22. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.27ல் முள்ளிக்கொரை பகுதியில் இரண்டாவது உள்ள நகராட்சி கழிப்பிடத்திற்கு மேல் உள்ள க.எண்.153 என்ற வீட்டின் பின்புறம் உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது தற்போது பெய்த மழையினால் மண் திட்டு ஆனது சரிந்து விட்டதால் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீட்டிற்கு உள்ளே சென்று விட்டது. எனவே மேற்கண்ட கதவு எண்.153 முதல் 157 வரை உள்ள இடத்தில் தடுப்புச் சுவர் உடன் கூடிய மழை

நீர்க் கால்வாய் அமைக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.30/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

23. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.8 பட்பயர் மேல் பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் உள்ளன. இதில் நகராட்சி குடியிருப்புகளும் உள்ளன. இப்பகுதியில் உள்ள மழைநீர்க் கால்வாய் ஆனது மழையினால் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்து உள்ளது. இதனால் மழைக்காலங்களில் மழைநீரானது கால்வாயில் செல்லாமல் அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரம்மப்படுகின்றனத். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்து உள்ள மழைநீர்க் கால்வாய்யை சரி செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

24. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.5 மேல் கோடப்பமந்து விநாயகர் கோவில் இருந்து கீழ் கோடப்பமந்து வரை நடைபாதையில் உள்ள பாதாளச் சாக்கடை பைப்லைன் ஆனது மிகவும் மோசமான நிலையில் மேன் ஹோல் மற்றும் பைப்லைன் பழுதடைந்து உள்ளதால் கழிவு நீரானது நடைபாதையில் சென்று கொண்டு இருக்கிறது. இதனார்ல பொதுமக்கள் இந்த நடைபாதையை பயன்படுத்தும் போது வழுக்கி விழும் நிலை உள்ளது. மேலும் இந்த கழிவு நீரால் அப்பகுதியில் துார்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயமும் உள்ளது. எனவே மேற்கண்ட நடைபாதையில் உள்ள பழுதடைந்த பாதாளச் சாக்கடை மேன்ஹோல் மற்றும் பைப்லைன்யை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90/–இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

25. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள பாட்னா ஹவுஸ் பகுதியில் உள்ள ாசலை ஆனது (RB கெஸ்ட் ஹவுஸ் முன்புறம்) தற்போது பெய்த மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறி உள்ளதால் இச்சாலை வழியாக வாகனங்கள் சென்று வர முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் இச்சாலையில் மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி விடுவதால் பொதுமக்கள் நடந் செல்ல முடியாத நிலை உள்ளதால் மக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட சாலையை சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

26. இந்நகராட்சிக்கு உட்படட அரசு தாவரவியில் பூங்கா அருகில் நகராட்சி கழிப்பிடம் பின்புறம் தாவரவியல் பூங்கா செல்லும் நடைபாதை மற்றும் மழைநீர்க் கால்வாய்யை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் அமைக்கப்பட்டு உள்ளதால் அதனை அகற்ற கோரியதன் அடிப்படையில்

கால்வாயின் மீதும் நடைபாதையின் மீதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ள கடைகளை அகற்றி அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தில் தெருவோர வியாபாரிகளுக்கு புதிதாக ஒரே மாதிரியாக 55 கடைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டு அதன்படி மேற்கண்ட இடத்தில் தாவரவியல் பூங்கா செல்லும் நடைபாதை ஓரத்தில் 55 பங்க் (1.50 x 1.50) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.49.95/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

27. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.26 இந்திர காலனியில் உள்ள சமுதாய கூடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் உபயோக்கி இயலாமல் உள்ளது. சமுதாய கூடத்தில் உள்ள கதவுகள், ஜன்னல்கள் மற்றும் தரைதளம் மிகவும் பழுதடைந்து உள்ளதாலும் மற்றும் போதிய பாதுகாப்பு சுவர்கள் இல்லாத காரணத்தால் வனவிலங்குகள் செல்வதாலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் உள்ள சமுதாய் கூடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்யவும் சுற்று சுவர் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7,50,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

28. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் எட்டின்ஸ் சாலையில் ஸ்ரீ சாந்தி விஜயா பெண்கள் மேல்நிலைப்பள்ளி முன்புறம் முதல் காந்தி மைதானம் கேட் வரையுள்ள சாலை ஓரங்களில் அதிக அளவிலான வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பள்ளி செல்லும் குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கும் செல்வதற்கும் மிகவும் சிரமப்படுவதால மேற்கண்ட இடத்தில் சாலையை உயர்த்தி நடைபாதை அமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்து மேற்கண்ட இடத்தில் நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.35/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

29. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட எட்டின்ஸ் சாலையின் தார் சாலை இயற்கை இடர்பாடுகளினால் மிகவும் பழுதடைந்து தார்சாலை குண்டும் குழியுமாக உள்ளது. மேற்கண்ட தார்சாலை பழுதடைந்துள்ளதால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள், பள்ளி செல்லும் குழந்தைகள் சுற்றுலாப் பயணிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். கோடைக் காலங்களில் மட்டுமல்லாமல் சாதாரண நாட்களிலும் காலங்களிலும் மட்டுமல்லாமல் சாதாரண நாட்களிலும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் இச்சாலையை இலட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரும் நகரின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள பிரதான சாலையாகும். இச்சாலையை சீரமைக்க கோரி பத்திரிக்கைகளிலும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள தார் சாலையில் தார் ஓட்டு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

அனுமதி வழங்கலாம்.

**30.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31ல் உள்ள எல்க்ஹில் பகுதியில் 50 குடும்பங்கள் உள்ள பகுதியில் அமைக்கப்பட்டு உள்ள 2” குடிநீர் குழாய் ஆனது பழுதடைந்து உள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் இல்லாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள வீடுகளில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி புதிதாக 2” குடிநீர் குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

**31.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் காலனியில் தற்போது பெய்த மழையினால் நடைபாதைய ஒட்டி உள்ள மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் நடைபாதையும் பழுதடைந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மண்திட்டு சரிந்து உள்ள இடத்திற்கு தடுப்பு சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

32. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.31 எல்க்ஹில் அரிஜன காலனியில் தற்போது பெய்த மழையினால் மண் திட்டு ஆனது சரிந்து விட்டது. இதனால் மண் திட்டு சரிந்ததால் அதன் அருகில் உள்ள நடைபாதையும் சரிந்து விட்டது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் நடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்டுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்.

33. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.8 கல்வீடு பகுதியில் சுமார் 80 வீடுகள் உள்ளன. இப்பகுதியில் உள்ள நடைபாதை ஆனது தற்போது பெய்த மழையினால் நடைபாதை ஆனது பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறி உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த நடைபாதைய சீரமைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.60/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

34. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.16 மிஷ்னரி ஹில் உள்ள பொது மாயனத்திற்கு செல்லும் நடைபாதையானது தற்போது பெய்த மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் நடந்து செல்வதற்கும், இறந்தவர்களின் உடலை நல்லடக்கம் செய்ய எடுத்துச் செல்ல முடியாமல் மிகவும் சிரம்மப்பட்டு செல்கின்றனத். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட மாயானத்திற்கு செல்லும் நடைபாதைய சீரமைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

35. இந்நகராட்சிக்கு உட்பட்ட தாவரவியல் பூங்கா அருகில் உள்ள ஆட்லி சாலையில் உள்ள நகராட்சியின் மழைநீர்க் கால்வாய் மற்றும் தார் சாலையின் மீது ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டப்பட்டு உள்ளதால் அதனை அகற்ற கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார். அதன்படி கால்வாயின் மீதும் தார்சாலை மீதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ள கடைகளை அகற்றி அப்புறப்படுத்தி விட்டு அந்த இடத்தில் உள்ள மழை நீர்க் கால்வாய்யை விட்டு விட்டு மீதமுள்ள இடத்தில் தெருவோர வியாபாரிகளுக்கு புதிதாக ஒரே மாதிரியாக 21 கடைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட ஆட்லி சாலையின் ஒரத்தில் 21 பங்க் (1.50 x 1.50) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.50/– இலட்சத்திற்கு பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

36. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் உள்ள கப்பினி கவுடர் லைனின் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீத் தொகை ரூ.6,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

37. இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN43F 4793 என்ற பாதாள சாக்கடை தொட்டியில் மண் அள்ளும் தூர் வாரும் வாகனத்தின் கிளட்ச் ஓவர் ஆயில் கியர் பாக்ஸ் ஓவர் ஆயில் எலக்ட்ரானிக் ஆயில் கசிவு மற்றும் ரொப் ஆகியவை பழுதடைந்து உள்ளதால், வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்படி பழுதுகள் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் மதிப்பிடு தொகை ரூ.43,300/– க்கு மட்டும் நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரு.43,300/–**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள் மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**

**38.** இந்நகராட்சி TN43E 2638 Bolero வாகனத்தின் டயர்கள், வைப்பர், மோட்டார், புட்ரெஸ்ட், மிஸ்ட் லைட் மாற்றுதல் மற்றும் ஒயரிங் ஆகியவை பழுதடைந்து உள்ளதால், வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்படி பழுதுகள் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் மதிப்பிடு தொகை ரு.79,700/– க்கு மட்டும் நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரு.79, 700/–**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**

**39.** இந்நகராட்சி TN43K 2197 Scorpio என்ற வாகனத்தில் ஆயில் சர்வீஸ், வீல் சர்வீஸ், மற்றும் இதர பாகங்கள் ஆகியவை பழுதடைந்து உள்ளதால், வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்படி பழுதுகள் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் மதிப்பிடு தொகை ரு.51,200/– க்கு மட்டும் நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரு.51, 200/–**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு நகர மன்றத்தின் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**

**41.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்கவும் ஆணையாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வேறு தொகையாக உள்ளதினால், தமிழ்நாடு முழுவதும் உள்ள

நகராட்சிகளில் ஒரே மாதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கோரிய கருத்துருக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மேற்படி கருத்துருக்களின் அடிப்படையில் குறைந்த பட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்திரவு நாளது வரை வரப்பெறாதக் காரணத்தினாலும் உத்திரவு பெறப்படும் வரை மினி கார்டன் கழிவு நேரற்றம் மின்பணியாளர் தகுதி II - 1 நபர் மற்றும் மின் கம்பி உதவியாளர் – 1 நபர், மேலும் காந்தள் கழிவு நிரேற்றம் நிலையத்தில் மின் பணியாளர் தகுதி II – 1 நபர் மற்றும் மின் கம்பி உதவியாளர் – 1 நபர் மொத்தம் மின் பணியாளர் தகுதி II – 2 நபர்கள் மற்றும் மின்கம்பி உதவியாளர் – 2 நபர்கள் மூலம் பணிமேற்கொள்ள ஆறு மாதத்திற்கு கால நீட்டிப்பு கோரி அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கும் வரை தற்பொழுது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்திரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையில் தொடர்ந்து மேற்கொள்ள 01–09–2022 முதல் 28–02–2023 வரை ஆறு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கவும் மேற்காணும் பணிக்கான உத்தேச செலவினம் தொகை ரூ7.00/– இலட்சம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**அனுமதி வழங்கலாம்.**

**42.** இந்நகராட்சிக்கு உட்பட்ட தாவராவியல் பூங்கா அருகில் உள்ள ஆட்லி சாலை செல்லும் சாலையின் சந்திப்பில் சாலையை ஆக்கிரமித்து கடைகள் வைக்கப்பட்டு உள்ளதால் சீசன் காலங்களில் தாவரவியல் பூங்கா பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் சாலையில் ஆக்கிரமித்து வைக்கப்பட்டு உள்ள தெருவோர வியாபாரிகளுக்கு ஒரே மாதிரியாக 6 கடைகள் அமைக்க வேண்டி உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் 6 கடைகள் (1.50 x 1.50) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

43. இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 18.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தாவரவியல் பூங்கா அருகில் மற்றும் ஆட்லி சாலையில் தெருவோர வியாபாரிகளுக்கு புதிதாக 21 கடைகள் அமைக்கும் பணி | 19.50 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | Thiru.S.Nagaraj அவர்கள் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவு | Thiru.S.Nagaraj அவர்கள் 0.001 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | Thiru.K.E.Krishnadas அவர்கள் 5.34 % மதிப்பீட்டைவிட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

44. இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் **18.08.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.19 ஹோட்டல் தாஜ் முதல் கமர்ஷியல் சாலை பிக் ஷாப் வரை 4" குடிநீர் குழாய் அமைக்கும் பணி | 8.00 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Sams Electricals அவர்கள் 0.002 % மதிப்பீட்டைவிட குறைவு | M/s.Sams Electricals அவர்கள் 0.002 % |

| | | |
|---|---|---|
| 2 | Thiru.P.Rajasekaran அவர்கள்<br>16.07% மதிப்பீட்டைவிட கூடுதல் | மதிப்பீட்டைவிட குறைவு |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

45 இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 18.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மெயின் பஜார் சாலையில் புதியதாக கடைகள் கட்டும் பணி | 30.00 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | Thiru.R.Nandakumar அவர்கள்<br>0.08 % மதிப்பீட்டைவிட குறைவு | Thiru.R.Nandakumar அவர்கள்<br>0.08 %<br>மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | Thiru.K.E.Krishnadas அவர்கள்<br>0.46 % மதிப்பீட்டைவிட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

46. இந்நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் **23.08.2022** அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர். கே புரம் நகராட்சி நடுநிலைபள்ளியில் ஒரு வகுப்பறையில் ஸ்மார்ட் கிளாஸ் (SMART CLASS) அமைக்கும் பணி | 18.00 |

| **வ. எண்** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|
| 1 | M/s.Atchaya Merchant, Trichy அவர்கள் 0.42 % மதிப்பீட்டைவிட குறைவு | M/s.Atchaya Merchant, Trichy அவர்கள் 0.42 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | M/s.V.R.Smart Buliding, Mettupalayam அவர்கள் 0.78 % மதிப்பீட்டைவிட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்.

47 இந்நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் **23.08.2022** அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் கோடப்பமந்து நகராட்சி உயர்நிலைபள்ளியில் ஒரு வகுப்பறையில் ஸ்மார்ட் கிளாஸ் (SMART CLASS) அமைக்கும் பணி | 18.00 |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Atchaya Merchant, Trichy அவர்கள் 0.42 % மதிப்பீட்டைவிட குறைவு | M/s.Atchaya Merchant, Trichy அவர்கள் 0.42 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | M/s.V.R.Smart Buliding, Mettupalayam அவர்கள் 0.78 % மதிப்பீட்டைவிட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம்

48. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலரின் குறிப்பின் படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான HMT சாலை நான்கு கடைகள் மற்றும் எட்டின்ஸ் சாலையில் இரண்டு ஆக்கிரமிப்பு கடைகளை நகராட்சி மூலம் வாடகை நிர்ணயம் செய்து கோரி பொது ஏலம் விடலாம் என தெரிவித்தன் அடிப்படையில் மேற்கண்ட ஆக்கிரமிப்பு கடைகளை சதுர அடி அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் அதனை பொது ஏலத்தில் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**அனுமதி வழங்கலாம்.**

(ஒம்) திருமதி.எம்.வாணீஸ்வரி,
நகர மன்ற தலைவர்,
உதகமண்டலம் நகராட்சி.

/உ.ந.உ.ப/

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.